## நம்மாழ்வார் திருவாய் மலர்ந்தருளிய
## திருவாய்மொழி 8-2 - நங்கள் வரிவளை
### (ஆழ்வார் தாம் தம் ஆத்மாவிலும், அதைச் சேர்ந்தவற்றிலும் ஆசையற்றுப் போனதை, தலைவனை நோக்கிச் செல்லக் கருதிய தலைவி பேச்சாலே அருளிச் செய்தல்)

3458 * நங்கள் வரிவளையாயங்காளோ! *
நம்முடை ஏதலர் முன்பு நாணி *
நுங்கட்கு யான் ஒன்று உரைக்கும் மாற்றம் *
நோக்குகின்றேன் எங்கும் காண மாட்டேன் **
சங்கம் சரிந்தன சாயிழந்தேன் *
தடமுலை பொன்னிறமாய்த் தளர்ந்தேன் *
வெங்கண் பறவையின் பாகன் எங்கோன் *
வேங்கடவாணணை வேண்டிச் சென்றே 1

3459 வேண்டிச் சென்று ஒன்று பெறுகிற்பாரில் *
என்னுடைத் தோழியர் நுங்கட்கேலும் *
ஈண்டிது உரைக்கும்படியை அந்தோ! *
காண்கின்றிலேன் இடராட்டியேன் நான் **
காண்தகு தாமரைக்கண்ணன் கள்வன் *
விண்ணவர் கோன் நங்கள் கோனைக் கண்டால் *
ஈண்டிய சங்கும் நிறைவும் கொள்வான் *
எத்தனை காலம் இளைக்கின்றேனே? 2

3460 காலம் இளைக்கில் அல்லால் * வினையேன்
நான் இளைக்கின்றிலன் கண்டு கொண்மின் *
ஞாலம் அறியப் பழி சுமந்தேன் *
நன்னுதலீர்! இனி நாணித் தான் என்? **
நீலமலர் நெடுஞ்சோதி சூழ்ந்த *
நீண்ட முகில்வண்ணன் கண்ணன் கொண்ட *
கோலவளையொடு மாமை கொள்வான் *
எத்தனை காலமும் கூடச் சென்றே 3

3461 கூடச் சென்றேன் இனி என் கொடுக்கேன்? *
கோல்வளை நெஞ்சத் தொடக்கம்[1] எல்லாம் *
பாடற்றொழிய இழந்து வைகல் *
பல்வளையார் முன் பரிசழிந்தேன் **
மாடக்கொடி மதிள் தென்குளந்தை *
வண்குடபால் நின்ற மாயக் கூத்தன் *
ஆடல் பறவை உயர்த்த வெல்போர் *
ஆழிவலவனை ஆதரித்தே 4

[1] துடக்கம்

3462 ஆழி வலவினை ஆதரிப்பும் * ஆங்கவன்
நம்மில் வரவும் எல்லாம் *
தோழியர்காள்! நம்முடையமே தான்? *
சொல்லுவதோ இங்கு அரியது தான் **
ஊழிதோறூழி ஒருவனாக *
நன்குணர்வார்க்கும் உணரலாகா *
சூழலுடைய சுடர் கொளாதித் *
தொல்லையஞ்சோதி நினைக்குங்காலே 5

3463 தொல்லையஞ்சோதி நினைக்குங்கால் * என்
சொல்லளவன்று இமையோர் தமக்கும் *
எல்லையிலாதன கூழ்ப்புச் செய்யும் *
அத்திறம் நிற்க எம் மாமை கொண்டான் **
அல்லிமலர்த் தண்துழாயும் தாரான் *
ஆர்க்கு இடுகோ இனிப் பூசல்? சொல்லீர் *
வல்லி வளவயல் சூழ் குடந்தை *
மாமலர்க்கண் வளர்கின்ற மாலே 6

3464 மால் அரி கேசவன் நாரணன் * சீமாதவன்
கோவிந்தன் வைகுந்தன் என்றென்று *
ஓலமிட என்னைப் பண்ணி விட்டிட்டு *
ஒன்றும் உருவும் சுவடும் காட்டான் **
ஏலமலர்க் குழல் அன்னைமீர்காள்! *
என்னுடைத் தோழியர்காள்! என் செய்கேன்? *
காலம் பல சென்றும் காண்பதாணை *
உங்களோடு எங்களிடை இல்லையே 7

3465 இடையில்லை யான் வளர்த்த கிளிகாள்! *
பூவைகள்! குயில்காள்! மயில்காள்! *
உடைய நம் மாமையும் சங்கும் நெஞ்சும் *
ஒன்றும் ஒழியவொட்டாது கொண்டான் **
அடையும் வைகுந்தமும் பாற்கடலும் *
அஞ்சன வெற்பும் அவை நணிய *
கடையறப் பாசங்கள் விட்ட பின்னை
அன்றி * அவன் அவை காண்கொடானே 8

3466 காண் கொடுப்பான் அல்லன் ஆர்க்கும் தன்னைக் *
கை செயப்பாலதோர் மாயம் தன்னால் *
மாண்குறள் கோல வடிவு காட்டி *
மண்ணும் விண்ணும் நிறைய மலர்ந்த **
சேண்சுடர்த் தோள்கள் பல தழைத்த *
தேவபிராற்கு என் நிறைவினோடு *
நாண் கொடுத்தேன் இனி என் கொடுக்கேன்? *

என்னுடை நன்னுதல் நங்கைமீர்காள்! 9

3467 என்னுடை நன்னுதல் நங்கைமீர்காள்! *
யான் இனிச் செய்வதென்? என்னெஞ்சு என்னை *
நின்னிடையேன் அல்லேன் என்று நீங்கி *
நேமியும் சங்கும் இருகைக் கொண்டு **
பன்னெடுஞ்சூழ் சுடர் ஞாயிற்றோடு *
பால்மதி ஏந்தி ஓர் கோல நீல *
நன்னெடுங்குன்றம் வருவதொப்பான் *
நாள்மலர்ப் பாதம் அடைந்ததுவே 10

3468 * பாதம் அடைவதன் பாசத்தாலே *
மற்றவன் பாசங்கள் முற்ற விட்டு *
கோதில் புகழ்க் கண்ணன் தன்னடி மேல் *
வண்குருகூர்ச் சடகோபன் சொன்ன **
தீதில் அந்தாதி ஓராயிரத்துள் *
இவையுமோர் பத்து இசையோடும் வல்லார் *
ஆதுமோர் தீதிலராகி * இங்கும் அங்கும்
எல்லாம் அமைவார்கள் தாமே 11

**அடிவரவு:** நங்கள் வேண்டி காலம் கூட ஆழி தொல்லை மால்
இடை காண் என் பாதம் அங்கு